REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: சித்திரை 29உ சனி (11—5—57) ★ ★ வெளியூர்: சித்திரை 30உ ஞாயிறு (12—5—57) இதழ் [285

நெய்வேலித் திட்டத்திற்கு ரஷ்யா உதவி

தெர்மல் நிலையத்திற்கு ரூ.16 கோடி

இந்தியாவுக்கு ரஷ்யா ரூ. 60 கோடி கடன் உதவி அளிக்க முன்வந்துள்ளதல்லவா?

இந்தத் தொகையில் ரூ. 27 கோடி கனரகத் தொழிலுக்கும், ரூ. 6 முதல் ரூ. 8 கோடி கோர்பா நிலக்கரித் திட்டத்திற்கும், ரூ. 2 கோடி கல்கத்தாவில் நிறுவப்படும் மூக்குக் கண்ணடித் திட்டத்திற்கும், சுமார் ரூ. 16 கோடி நெய்வேலித் திட்டத்தின்கீழ் ஏற்படுத்த இருக்கும் தெர்மல் (சூடுள்ள) நிலையத்திற்கும் ஒதுக்கப்படலாம் என்று அதிகார பூர்வமாகத் தெரியவருகிறது.

தி. மு. கழகம் அபாயமான இயக்கமாம்

அரசியல் கட்சியாகப் பதிவுசெய்ய மறுப்பு

மலாய சர்க்காரின் விசித்திரப் போக்கு

சிங்கப்பூர், மே 10—

மலாய சர்க்கார் கண்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகம், ஒரு ஆபத்தான கட்சியாகப் படுகிறதாம்!

இங்குள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தங்களை ஒரு அரசியல் கட்சியாகப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டிருக்கின்றனர்.

'அவ்வாறு பதிவு செய்துகொள்வது, பொதுஜன அமைதிக்கு அபாயம் விளைவிக்கக் கூடியதாகும்' என்றுகூறி, மலாய சர்க்கார், பதிவுசெய்ய மறுத்துள்ளனர் என்று தெரியவருகிறது.

எந்தவகையில் திராவிட முன்னேற்றக் கழகம், பொதுஅமைதிக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடியது என்ற காரண விளக்கத்தை, சர்க்கார் கூறக்காணோம்.

1857-ம் ஆண்டு சுதந்திரப் போராட்டம்

இந்தியாவெங்கணும் கொண்டாட்டம்

புது டில்லி, மே 10—

வெள்ளை ஏகாதிபத்தியவாதிகள் இந்தியத் துணைக்கண்டத்தில் கால்கொள்ளச் செய்த முயற்சிகளுக்கும், கிழக்கு இந்தியக் கம்பெனியின் ஆதிக்க விரிவுக்கும் எதிராக 1857-ம் ஆண்டு மே திங்கள் 10-ம் நாள் இராணுவத்தினர் நடத்திய போராட்டத்தின் நூற்றாண்டு நினைவு விழா, இன்று இந்தியத் துணைக்கண்டமெங்கும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டிருக்கிறது.

பல மாநிலங்களின் தலைநகர்களிலும், இதர நகரங்களிலும் அந்தப் போரில் விழ்ந்துபட்ட வீரர்களின் நினைவு கூறப்பட்டது.

ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் மூலம் இந்த விழா சிறப்புடையதாக்கப்பட்டிருக்கிறது.

பல தலைவர்களும், 'இந்தப் போர்தான் முதல் இந்திய விடுதலைப் போர்' என்றும் 'இதில் விழ்ந்துபட்டவர்கள் இந்திய சுதந்திரத்திற்காக உயிர் தந்த தியாகிகள்' என்றும் பாராட்டிப் பேசினர்.

இந்த விழா பற்றிய செய்தி வெளியிடுகையில் 'இந்து' இதழ் குறிப்பிடுவதாவது:—

"அன்னிய ஆதிக்கத்துக்குப் புகளுக்கு எதிராக எழுந்த முதல் சுதந்திரப் போராட்டமா அல்லது இன்னும் பிரிட்டிஷார் கருதுவது போல இராணுவத்திற்குள் எழுந்த வெற்றி பெற முடியாது போய்விட்ட ஒரு கலகமா என்பது குறித்து வரலாறு இன்னும் தனது முடிவான தீர்ப்பினைக் கூறவில்லை. ஆனால், இந்தியா இன்று, வெள்ளையர் ஆட்சியைத் தூக்கி எறிவதற்காக மேற்கொள்ளப்பட்ட அந்த முயற்சியில் வீழ்ந்துபட்டவர்களைத் தியாகிகள் எனக் கொண்டாடுகிறது."

அந்நியர் சிலைகளை அகற்றப் போராட்டம்?

தடை உத்தரவு பிறந்தது

கான்பூர், மே 9—

"1957-ல், மக்கள் புரட்சியை ஒடுக்குவதற்குக் காரணமாக இருந்த பிரிட்டிஷ் தளபதிகளின் சிலைகளைப் பொது இடங்களிலிருந்து அகற்றி பொருட்காட்சிசாலைகளில் வைக்கப்படவேண்டும்" என்று சொன்சபை தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

சுதந்திரப் போராட்ட 100-வது ஆண்டு விழாவின்போது, அந்நியர்களின் சிலைகளையும் சமாதிகளையும், சிதைத்துச் சேதப்படுத்தி அப்புறப்படுத்த ஒரு போராட்டம் துவக்கப்போவதாக சோஷலிஸ்டுகள் அறிவித்துள்ளனர்.

இது அமைதியைக் குலைத்துவிடும் என்று கான்பூர் மாவட்டத்தில் கி. பி. கோ. 144-வது பிரிவின்கீழ் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

வடநாட்டு திட்டத்திற்குப் பணம்தேட இதர பகுதிகளில் செலவு குறையுமாம்

ரூ. 100 கோடியில் இயந்திர உற்பத்தித் தொழிற்சாலை

மேற்கு வங்கத்தில் நிறுவ டெல்லிப் பெரியவர்கள் தீவிர முயற்சி

புதுடில்லி, மே 9—

இந்தியாவின் கனரக இயந்திரத் தொழிற்சாலைகளை வடநாட்டிலேயே ஏற்படுத்த மத்திய அரசாங்கம் முனைந்துள்ளது. மேற்கு வங்கம், இந்த கனரகத் தொழிலின் கேந்திரமாக அமைக்கப்பட இருக்கிறது.

ராஞ்சி பகுதியில் பல்வேறு இயந்திரத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்படுமாம்.

பிரிட்டன், செக்கோஸ்லேவியா, ஜெர்மனி, ரஷ்யா முதலிய நாடுகள் இந்தியாவுடன் கூட்டாக சேர்ந்து இந்தத் தொழிற்சாலைகளை நிர்மாணிக்குமாம்!

இந்தியாவிலேயே இதுதான் மிகப் பெரிய திட்டமாகும்.

இதற்கு மொத்தம் ரூ. 90 கோடி முதல் ரூ. 100 கோடி வரை செலவிடப்படுமாம்.

இந்தத்தொழிற்சாலையை ஒட்டி அமையும் நகரப் பகுதிகளுக்கு என்று மேலும் பணம் செலவழிக்கப்படுமாம்.

இந்தத் திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுக்காலத்தில் துவக்கப்பட்டு மூன்றாவது திட்டக்காலத்தில் முடிவடையக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

4 அல்லது 5 தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்படுமாம்.

கனரகத் தகடுகள் தயாரிப்பு நிலையத்தை பிரிட்டனும், பவுண்டரி நிர்மாணத்தை செக்கோஸ்லேவியாவும், கனரகக் கருவிகள் தயாரிப்பு நிலையத்தை ஜெர்மனியும், கனரகக் கருவிகள்—கனரக இயந்திரங்கள் உற்பத்தி நிலையங்களை ரஷ்யாவும் அமைத்துத்தரக்கூடுமாம்.

ஆரம்பக்காலத்தில் 45,000 டன் உருக்கை இயந்திரங்களாக மாற்றுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது; பின்னர் அந்த இலக்கு 80,000 டன்னாகவும் அதைவிட அதிகமாகவும் நாளடைவில் விரிவாக்கப்படுமாம்.

இந்தத் திட்டத்தில் பண்டித நேரு அதிக அக்கறை கொண்டுள்ளனராம். அவசியமேற்பட்டால், மற்ற பகுதிகளில் வேறு திட்டத்தின் செலவைக் குறைத்துக் கொண்டாவது வடநாட்டில் ஏற்படுத்தப்படும் இந்தத் திட்டத்திற்குப் பணம் தேட எண்ணுவதாகத் தெரிகிறது.

கொலம்பியாவில் புரட்சி-மக்கள் தலைவர் ஓட்டம்!

நியூயார்க், மே 10—

கஸ்டவோ ரோஜாஸ் பினிலா என்பவரை மக்கள் தலைவராகக் கொண்ட கொலம்பியாவில் இராணுவப் புரட்சி எழுந்துள்ளது. அதிகாரத்தை ஒரு இராணுவக் கூட்டம் கைப்பற்றியுள்ளதாம்.

தி. மு. கழக மக்கள் சபை உறுப்பினர்களான ஈ. வெ. கி. சம்பத், தர்மலிங்கம்

தமிழில் பதவிப் பிரமாணம் எடுத்தனர்

புதிய மக்கள் சபைக் கூட்டம் துவங்கிற்று

புதுடில்லி, மே 11—

திராவிட முன்னேற்றக் கழகப் பாராளுமன்ற உறுப்பினர்களான தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், இரா. தருமலிங்கம் ஆகியோர் நேற்று, மக்கள் சபையில், தமிழ் மொழியில் பதவிப் பிரமாணம் எடுத்தனர்.

தமிழகத்திலிருந்து சென்றுள்ள காங்கிரசாரில் பலர், மற்றும் சில கட்சிக்காரர்களும், தமிழ் மொழியிலேயே பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டிருக்கின்றனர்.

இந்தியத் துணைக்கண்டத்தில் பல மாநிலங்களிலிருந்தும் வந்துள்ள உறுப்பினர்கள் பலர், தங்கள் தங்கள் தாய்மொழியிலேயே பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டிருக்கின்றனர் என்பது குறிப்பிடத் தகுந்த ஒன்றாகும்.

வங்கத்திலிருந்து வந்துள்ள உறுப்பினர் எவரும் வங்காளி மொழியில் தவிர, வேறெந்த மொழியிலும் பதவிப் பிரமாணம் எடுக்கவில்லை.

பதவிப் பிரமாணச் சடங்கில், மொழி உணர்வே தலைதூக்கி நின்றதாக சென்னை இதழ் நிருபர் ஒருவர் எழுதியிருக்கிறார்.

புதுடில்லியில் நேற்று காலை புதிய மக்கள் சபையின் முதற் கூட்டம் துவங்கிற்று.

குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட தற்காலிக சபைத் தலைவரான சேத் கோவிந்ததாஸ் உறுப்பினர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்துவைத்திருக்கிறார்.

பண்டித நேரு உள்ளிட்ட பல மந்திரிகள் இந்தியில் உறுதிமொழி ஏற்றனராம்!

எதிர்க்கட்சி எது?

எதிர்க்கட்சி என்ற அங்கீகாரம் பெற மக்கள் சபையில் குறைந்தது 50 உறுப்பினர்களாவது வேண்டும்; இந்த எண்ணிக்கையுடைய எந்தக் கட்சியும் இல்லாமையால், எந்த ஒரு கட்சியும் அங்கீகாரம் பெறாது என்று தெரியவருகிறது.

வெளிநாட்டுக் கலாச்சார நிறுவனங்கள்

சர்க்கார் ஊழியர்கள் பங்கு பெறத் தடை

புதுடில்லி, மே 11—

வெளிநாட்டுக் கலாச்சார நிறுவனங்களில் ஈடுபாடுகொள்ளக் கூடாதென சர்க்கார் ஊழியர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாம்.

ஜெர்மன்—இந்தியா சங்கம், இந்தோ—சோவியத் கலாச்சாரக் கழகம் என்பன போன்ற நிறுவனங்களில், சர்க்கார் ஊழியர்கள் நிர்வாகிகளாகவும், உறுப்பினர்களாகவும் பங்கு பெறுவது கூடாது என்றும், அப்படிப் பங்கு பெறுதல் ஆட்சேபணைக்குரிய ஒன்று என்றும் கூறப்பட்டிருக்கிறது.

"இந்த நிறுவனங்கள் சிலவற்றின் நோக்கங்கள் சிறந்தனவையாகவும் பாராட்டுதலுக்குரியனவாகவும் இருக்கலாம்; என்றாலும், வெளிநாடுகளிலிருந்து பிரமுகர்கள் வரும்போது அவர்களுக்கு இந்தச் சங்கங்கள் சார்பில் வரவேற்பு தரப்படுகிறது. அப்படித் தருவதில், நிர்வாகிகள் என்ற முறையில் சர்க்கார் ஊழியர்களும் பங்கு பெறுகின்றனர்; அது கூடாது என்று சர்க்கார் கருதுகிறது" என்பதாக விளக்கம் தரப்படுகிறது.

முன்னாள் காங்கிரஸ்காரர்மீது திடீர் நடவடிக்கை

சென்னை, மே 10—

தேர்தலில் காங்கிரசுக்கு விரோதமாக வேலை செய்தனர் என்று இதுவரையில் 60 காங்கிரஸ்காரர்களை த. நா. கா. தலைவர் கட்சியிலிருந்து விலக்கி வைத்திருப்பது தெரிந்த ஒன்றாகும். இப்போது மேலும் 43 காங்கிரஸ்காரர்களைக் கட்சியிலிருந்து விலக்கியுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

நம் நாடு
தி.மு.கழகத்தின் இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 11—5—57 சனி

வீராப்பு எங்கே?

'வடநாடு வளருகிறது—தென்னாடு தேய்கிறது' என்பது வெறும் அடுக்குச்சொல் அலங்காரம் அல்ல என்பதையும், மாற்றாரும் ஒப்புக்கொண்டுள்ள உண்மை என்பதையும் இந்தப் பகுதி பன்முறை எடுத்துக்காட்டியிருக்கிறது.

ஆனால் வடநாட்டு ஏகாதிபத்திய வெறியர்களைத் தங்களது எஜமானர்களாக ஏற்றுக்கொண்டு, அவர்களது வஞ்சகங்களுக்கு நியாயம் கற்பித்துக்கொண்டிருப்பதே தங்கள் இலட்சியம் எனக் கூறிவரும் தமிழ்நாட்டு ஆட்சியாளர்கள், இந்த உண்மையை ஒப்ப மறுக்கிறார்கள்.

'தமிழகத்தின் நலன்களைப் பாதுகாப்பதில் நாங்கள் ஒன்றும் எவருக்கும் சளைத்தவர்கள் அல்ல' என்று வீராப்பு மட்டும் பேசுகிறார், சட்டசபையில் கனம் நிதிமந்திரி சுப்பிரமணியம்.

கடந்த காலத்தில், வீராப்புப் பேசும் இந்த அமைச்சர் தமிழர்களின் நலன்களைப் பாதுகாத்த விதம் தமிழ் மக்களுக்குத் தெரிந்துதான் இருக்கிறது.

முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில், தென்னாட்டிற்கு—அதிலும் குறிப்பாகவும் சிறப்பாகவும் தமிழகத்திற்கு வடநாட்டுப் பெரியவர்கள் இழைத்தக் கொடூரமான அநீதிகள் உலகப் பிரசித்தமானவையாகும். இவற்றில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இழைக்கப்பட்ட அநீதிகூட இந்த வீராப்புப் பேசும் அமைச்சருக்குத் தெரியாமலிருந்திருக்கலாம். ஏனெனில், ஐந்தாண்டுத் திட்டம் என்பது ஒரு அபிவிருத்தித் திட்டம் என்ற விளக்கம்கூட இந்த மாநில அமைச்சர்களுக்குத் தெரியாது அன்று. அந்தத் திட்டம் வடநாட்டின் வளர்ச்சிக்கு மட்டுமேதான் என்ற உண்மையை நாம் ஊரறியச் செய்தபின்தான் அப்படி ஒரு திட்டம் இருப்பதாக இந்த மந்திரிகளுக்கு உணர்வு வந்தது எனலாம். ஆனால் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில், தென்னாட்டிற்கு உரிய பங்கு கிடைக்கவில்லை என்பதையும், அநீதி இழைக்கப்படுகிறது என்பதையும் இந்த நிதிமந்திரி அவர்கள் தனது சுயஅனுபவத்திலேயே நிச்சயம் உணர்ந்திருக்கிறார். தான் உணர்ந்த அந்த உண்மையை ஓரிரு சமயங்களில் பாதுகாப்பான வார்த்தைகளால் வெளிப்படுத்தியும் இருக்கிறார். என்றாலும், தமிழரின் நலன் காக்க, அவர்களுக்கு நியாயம் கிடைக்க, இந்த அநீதியைக் கண்டித்து குரல் தரவேண்டும் என்று தோன்றவில்லை, போராட வேண்டும் என்ற எண்ணம் பிறக்கவில்லை; வீராப்பு மட்டும் பேசுகிறார். சில நேரங்களில், தமிழகத்திற்கு அப்படி ஒரு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது என்ற தாம் ஒப்பிய உண்மையையே மறைக்கவும் முயலுகிறார்.

கவர்னர் உரைமீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளித்த, நிதியமைச்சர் சுப்பிரமணியம், 'ஐந்தாண்டுத் திட்டங்களில் தென்னாடு வஞ்சிக்கப்பட்டது ஏன்?' என்று நமது கழக எம். எல். ஏ.-க்கள் எழுப்பிய குற்றச்சாட்டிற்கு நேரடியாக பதிலளிக்க மறுத்துவிட்டதுடன், 'நியாயப்படிதான் நாங்கள் நடந்துகொள்வோம்' என்று மட்டும் கூறினார். அதாவது, 'வட நாடு வளருகிறது—தென்னாடு தேய்கிறது' என்ற உண்மைக்குத் திரையிடவே அவர் முயன்றார்.

அவரது மேலான பார்வைக்கு டெல்லியிலிருந்து நேற்று முன்தினம் வெளியாகியுள்ள செய்தி ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறோம். 90 முதல் 100 கோடி ரூபாய்வரை மூலதனமிட்டு, கனரக இயந்திரங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ டெல்லி சர்க்கார் திட்டமிட்டிருக்கிறார்களாம்.

ஏற்கனவே பெரிய தொழில்கள், கன ரகத் தொழில்கள் எல்லாம் எந்த வடநாட்டில் நிறுவப்பட்டிருக்கின்றனவோ அந்த வடநாட்டில்தான்—ராஞ்சி என்ற பகுதியில்—இந்தத் தொழிற்சாலையும் நிறுவப்படுமாம்.

கனரகத் தொழில்களும் அங்கே! அவற்றிற்குத் தேவையான இயந்திரங்களை உற்பத்தி செய்யும் தொழிலும் அங்கேதான்!

இதற்கு, நூறு கோடி ரூபாய் மூலதனமாம். பிரிட்டன், செக்கோஸ்லவேக்கியா, ஜெர்மனி, ரஷ்யா ஆகிய நாடுகளின் கூட்டுறவுடனும் உதவியுடனும் இந்தப் பிரம்மாண்டமான தொழிற்சாலை நிறுவப்பட உத்தேசமாம். இதன் அருகே மேலும் பல கோடி ரூபாய் செலவில் ஒரு பெரும் நகரமே உருவாகுமாம். இரண்டாம் திட்டக் காலத்தில் வேலை துவங்குமாம்; மூன்றாம் திட்டக் காலத் துவக்கத்தில் முடியுமாம்.

இந்தச் செய்தி, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டமும் எப்படி உருவாகப்போகிறது என்பதற்கு ஒரு சூசகமான அறிவிப்பு என்று கருதுவதில்கூடத் தவறில்லை.

தமிழ் நாட்டு ஆட்சியாளர்கள் தன்மான உணர்வு பெற்று, இந்த நாட்டு நலனில் விசுவாசம் கொண்டவர்களாக இருந்தால் அல்லவா, வடநாட்டவர் இதுபோல தங்கள் நாட்டை இந்த நாட்டின் செலவில், வளப்படுத்திக்கொள்ளத் தயங்குவார்கள்!

கனம் மந்திரிகளுக்கு வீராப்புப் பேசத் தெரிகிறதே தவிர, வடநாடு வளரும் வகையும், தென்னாடு தேம்பும் விதமும் தெரியக் காணோமே!

அணு நிவாரணி!

அணு ஆயுதக் கதிரியக்க அபாயத்தைத் தடுக்கக்கூடியது என நம்பப்படும் புதிய மருந்தொன்று இப்போது சோதிக்கப்பட்டு வருகிறது.

இதன் பெயர் 'ஏ. இ. டி.' இது அமெரிக்காவிலுள்ள ஓக்ரிட்ஜ் தேசீய ஆராய்ச்சிச்சாலையில் தயாரிக்கப்பட்டுள்ளதாம்.

'என்.ஜீ.ஓ., கிராம அதிகாரிகள், போலீசார், ஆசிரியர் சம்பள உயர்வுப் பிரச்சினைகள் என்ன ஆயிற்று?'

'தொழில் வளர்ச்சித் திட்டத்தில் நமக்குரிய பங்கு ஏன் கிடைக்கவில்லை?'

சட்ட சபையில் எம்.பி. சுப்பிரமணியம் முழக்கம்

6-5-57 அன்று சென்னை சட்ட மன்றத்தில் கவர்னர் உரை மீது நடைபெற்ற விவாதத்தின்போது, தி. மு. கழகச் சட்டசபைக் கட்சி செயலாளர் எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் ஆற்றிய கருத்துரை இங்கு தரப்படுகிறது :—

"கவர்னர் பெருமானுடைய பேருரையில், வழக்கத்துக்கு மாறாக, அமைச்சரவையின் கொள்கைகளும் திட்டங்களும், வரப்போகின்ற வரவு - செலவுத் திட்டத்தில் காணப்படுமென்றும், இரண்டாயிரம் மாடுகளும், ஐயாயிரம் கோழிக் குஞ்சுகளும் விநியோகிக்கப்படுமென்று நுணுக்கமானவைகளை மட்டும் குறிப்பிட்டிருப்பது எல்லோருக்கும் ஏமாற்றத்தை அளித்திருக்கிறது.

உருப்படியான பலன் ஏற்படக் காணோம்!

"இந்த நாட்டில் இன்று அனைவருடைய கவனத்தையும் கவர்ந்திருப்பது என். ஜி. ஓ.-க்களுடைய சம்பள உயர்வுப் பிரச்சினையாகும். கிராம அதிகாரிகள், வேலைநிறுத்தம் செய்வோமென சர்க்காருக்கு முன்னறிவிப்பு கொடுத்துள்ளனர்; அதைப் போலவே இன்று போலீஸ்காரர்கள், ஆரம்ப ஆசிரியர்களின் சம்பள உயர்வுப் பிரச்சினையும் முக்கியத்துவம் வாய்ந்தது.

"இவர்களுடைய சம்பளம் உயரவேண்டுமென்று பல ஆண்டுகளாகக் கோரிவந்தபோதிலும் சில பல குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தும், அரசாங்கம் அவர்களுக்கு வாக்குறுதி கொடுத்திருந்தும், உருப்படியான பலனை ஒன்றும் காணோம். ஒரு கேள்விக்கு கனம் நிதியமைச்சரவர்கள் பதிலளிக்கையில், மத்திய அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுப்பதுபோல, என். ஜி. ஓ. - க்களுக்கும் பஞ்சப்படி உயர்வளித்தால் ஏறக்குறைய ரூ. 8 கோடிக்கு மேல் ஆகுமென்றும், சம்பளத்தையும் ஏற்றுவதென்பது முடியாத காரியம் என்றும் குறிப்பிட்டு இந்தப் பிரச்சினையை தள்ளிப் போட்டிருக்கிறார். இதைப் போலவேதான், கிராம ஊழியர்கள், மற்ற சிப்பந்திகள் பிரச்சினையும் இருக்கிறது.

நியாயமான செலவை ஏற்றுக்கொள்ளத் தயக்கமேன்?

"தனிப்பட்டவர்கள் விஷயத்தில் வருவாய்க்குத் தக்க செலவும், நாட்டின் பொருளாதார விஷயத்தில், செலவுக்குத் தக்க வருவாயும் ஏற்படுத்துவதுதான் அறிவுடைமை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நியாயமான செலவு எதுவோ அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். கையிலே பணமில்லை என்று சொல்லி வாளாயிருப்பது ஏற்றதாகாது.

"என். ஜி. ஓ. - க்களுடைய கோரிக்கையெல்லாம், ஒத்த வேலை செய்கின்ற மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு அதிகப் பஞ்சப்படியும், அதிகச் சம்பளமும் கொடுக்கும்போது, தங்களுக்கு மட்டும் மாகாண அரசாங்கம் என்ற காரணத்துக்காக குறைந்த பஞ்சப்படியும், சம்பளமும் கொடுப்பது என்பது எந்தவிதத்திலும் நியாயமாகாது. 'சோஷலிச சமுதாய'த்தை அமைக்க விரும்பும் இந்த மாகாணத்திற்கு இது பொருந்தாது. இந்த நியாயத்தை-அடிப்படையை எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால் பணம் வேண்டுமென்றுதான் சொல்லுகிறார்கள். அரசாங்கத்தின் வருவாயை அவர்கள் உயர்த்தவேண்டும் என்று விரும்பினால், அதற்கான வழி வகைகளை நாங்கள் சொல்லத் தயாராய் இருக்கிறோம்.

ஊதியம் உயரவில்லை — அலுவல்மட்டும்உயர்ந்தது

"அதுபோலவேதான் கிராம ஊழியர்கள் பிரச்சினையுமாகும். மாதம் ஒன்றுக்கு ரூ. 18 முதல் ரூ. 23 வரையில் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. 10 ஆண்டுகளுக்கு முன்னர் வெள்ளைக்காரர்கள் ஆட்சியில் யுத்தத்தை முன்னிட்டு அவர்களுக்குச் சிறிது சம்பள உயர்வு அளிக்கப்பட்டது. அதற்குப் பிறகு அவர்களுக்கு சம்பள உயர்வு ஒன்றும் அளிக்கப்படவில்லை. இப்பொழுது வாழ்க்கைப் புள்ளி எவ்வளவோ உயர்ந்துவிட்டது. அதுமட்டுமல்ல—மாமூலாக அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட உணவுத் தானியங்கள் எல்லாம் இன்று 'இலஞ்சம்' என்ற பெயரால் தடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்களுடைய மேலைமட்டும் பன்மடங்கு உயர்ந்துவிட்டது.

சேகரிக்கும் புள்ளிவிவரம் கற்பனையானால்...!

"மக்களின் எண்ணிக்கையின் புள்ளி விவரங்களும், எவ்வளவு ஏக்கர் நஞ்சை - புஞ்சை உற்பத்தியாகிறது என்ற புள்ளி விவரமும்; இன்னும் எத்தனையோ புள்ளி விவரங்களும் அவர்களால் தயாரிக்கப்படுகின்றன. எவ்வளவோ அதிகாரிகளுடன் அவர்கள் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. கிராமங்களுக்குச் செல்லுகிற அதிகாரிகளுடன் உறுதுணையாக இருந்து, இரவு-பகலென்று பாராமல் அவர்களுடன் ஒத்துழைக்க வேண்டியிருக்கிறது. இப்பேர்ப்பட்ட ஊழியர்கள் பிரசினை தீர்க்கப்படவில்லை என்றால், அவர்கள் சேகரிக்கும் புள்ளிவிவரங்கள் கற்பனையாகவேதான் இருக்கும் என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை.

"கிராமத்திலுள்ள கர்ணீகர்களும், கிராம முன்சீப்களும் என்ன செய்கிறார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். வேலைப்பளு அதிகமாக இருப்பதன் காரணமாக அவர்கள் வீட்டிலேயே உட்கார்ந்துகொண்டு, புள்ளிவிவரங்களைத் தயார் செய்கிறார்கள். அந்தப் புள்ளிவிவரங்களை நம்பித்தான் இவ்வளவு ஏக்கர் பயிராகியிருக்கிறது என்று நமது சர்க்கார்கள் சொல்லுகிறார்கள். அந்தப் புள்ளி விவரங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டுதான் அநேக திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன.

உருப்படியான காரியம் உருவாகுமா?

"நாலைந்து கிராமங்களுக்கு ஒரு கிராம அதிகாரி போதும் என்று சொல்லுகிறார்கள்; அப்படி செய்தால் கிராம மக்களுக்கும், கிராம அதிகாரிகளுக்கும் இருக்க வேண்டிய தொடர்பு அறுபட்டுவிடும். உண்மையில் காரியம் எதுவும் செய்ய முடியாத நிலைமைதான் ஏற்படும்.

தெளிவாகாத பிரச்சினை!

"ஆரம்ப ஆசிரியர்களின் பிரச்சினையும் கவனிக்கப்படவில்லை. திட்டக் குழுவின் அடிப்படையின் கீழ் 3,000 பள்ளிகள் இருக்கின்றன. அங்கே உள்ள ஆசிரியர்களுக்கு ஓராண்டு பயிற்சி போதுமா, ஈராண்டுப் பயிற்சி தேவையா? உதவித் தொகை ரூ. 18 மட்டும்தான் கொடுப்பார்களா அல்லது சம்பளம் முழுவதுமா, அல்லது பாதிதான் கொடுப்பார்களா? — என்பன போன்ற விஷயங்கள் தெளிவாக்கப்படவில்லை.

வலியுறுத்தியதெல்லாம் வீண்தானா?

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நமக்கு உரிய பங்கு கொடுக்கப்படவில்லை என்பதை நாங்கள் மட்டுமல்ல—எதிர்தரப்பில் இருப்பவர்களும் சேர்ந்துதான்—மீண்டும் மீண்டும் வலியுறுத்தி இருக்கிறோம். கடந்த சட்டசபையில் ரூ. 400 கோடிக்குத் திட்டங்கள் தீட்டப்பட்டதாகச் சொல்லப்பட்டு அது 230 கோடியாக மாற்றப்பட்டு, ரூ. 170 கோடி அதிகரிக்கப்பட்டு, மீண்டும் அது குறைக்கப்பட்டு, சென்ற ஆண்டிலே ரூ. 30 கோடியும் இந்த ஆண்டிலே ரூ. 32 கோடியும் செலவழிக்கப்படும் என்று கூறும்போது—சென்னை மாகாணத்திலே ரூ. 150 கோடிக்கு மேல் செலவழிக்கப்படமாட்டாது என்று தெரிகிறது. நெய்வேலித் திட்டமும், சேலம் மாவட்டத்திலே அலுமினியம் தொழிற்சாலையும் ஏற்படுத்துவதாக இருந்தபோதிலும் நமக்கு உரிய பங்கை கொடுக்கவில்லை என்பதை அரசாங்கத்திற்கு வலியுறுத்துகிறேன். மத்திய அரசாங்கத்திடமிருந்து உரிய பங்கை பெறுவதற்கு நமது சர்க்கார் எல்லாவித முயற்சியும் எடுக்க வேண்டும். இதற்கு எதிர்க்கட்சியின் முழு ஆதரவும் இருக்கும்."

தனி அதிகாரம் வழங்குமாறு அசாம் மாநிலம் குரலெழுப்புகிறது

கோரிக்கையை டில்லி ஏற்குமா?

ஷில்லாங், மே 9—

அசாமில் இப்போதையஉணவு நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு கொள்ளை இலாபம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் சமூகத்திற்கு விரோதமான செயல்களில் ஈடுபட்டிருக்கும் வியாபாரிகளைத் தண்டிப்பதற்கு, முக்கியப் பொருள்களின் சட்டத்தின்கீழ் மாநிலங்களுக்குத் தனி அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று அசாம் அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தியிருக்கிறது.

அடுத்து வரும் மூன்று திங்களுக்கு உணவு நிலைமை திருப்திகரமாகயில்லை என்றும், நியாய விலைக் கடைகளின் மூலம் சரிவர உணவுப் பொருள்கள் விகியோகிக்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டி, மத்திய அரசாங்கம் தனக்கு அதிகாரமளிக்கும் என்று நம்புவதாக அசாம் உணவு அமைச்சர் நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

மேற்கு வங்கத்திலும் உணவு நிலை மோசம்

10,000 டன் தர மத்திய ஆட்சி முன் வருகிறது

கல்கத்தா, மே 9—

மேற்கு வங்கத்தில் உணவு நிலைமை மிகவும் மோசமாக உள்ளதாம். சென்ற திங்களில் 5,000 டன் உணவுப் பொருள்களை மத்திய அரசாங்கம் தந்துள்ளதாம். தற்போதைய நிலையைக் கண்டறிந்து, இந்த மாதம் 10,000 - டன் உணவுத் தானியம் தர மத்திய அரசு முன்வந்துள்ளதாம்.

தமிழன்னைக்குத் தாயகத்திலேயே களங்கம் ஏற்படுவதா?

ஆட்சி மொழியாக்கப் பரிசோதனை நடத்துவானேன்?

பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தை வ.ஆ. மாவட்டத்திற்கும் விரிவுபடுத்த வேண்டும்

சட்ட மன்றத்தில் ப. உ. சண்முகம், அண்ணமலை ஆகியோர் தெளிவுரை

"எதிர்க் கட்சியினரான நாங்கள்தான், ஏதோ, சர்க்கார் செய்யத் தவறியவற்றை எல்லாம் எடுத்துக் காட்டிக் குறை கூறுவதுபோல, சிலர் இங்கு பேசினர்கள்.

"ஆனல், இங்கு பேசிய காங்கிரஸ்காரர்கள் அனைவரும் கூட, 'நான் கவர்னர் உரையைப் பாராட்டுகிறேன்' என்று கூறிவிட்டு, 'என் தொகுதியில் இதைச் செய்யவில்லை-அதைச் செய்யவில்லை; அது வேண்டும்-இது வேண்டும்' என்றுதான் குறைகளைக் கூறினர்கள். எனவே, நாங்கள் மட்டும் இங்கே குறைகளை எடுத்துச் சொல்லவில்லை. மேலும், 'எதிர்க் கட்சியினர் குறைகூறவே இருக்கிறார்கள்' என்றும் கருதக்கூடாது.

'நாங்கள், தாயகத்திற்கு 'விடுதலைத் தேன்' பெற்றுத் தர விரும்புபவர்கள்; பெற்றுத் தருவதற்காக எங்களை ஒப்படைத்திருக்கிறவர்கள்.

'அப்படி விடுதலைத் தேன் பெறச் செல்லுகையில், தேனீக்கள் கொட்டும் என்பதைத் தெரிந்தும்தான் இந்த வேலையில் ஈடுபட்டிருக்கிறோம் என்பதால், தேனீக்கள் கொட்டுகின்றனவே என்று கருதித் திரும்பிவிடமாட்டோம்.

"நாங்கள் இங்கே எதற்காக அனுப்பப்பட்டிருக்கிறோமோ அதைச் செய்யாமலும் இருக்கமாட்டோம்.

"எங்களுக்குச் சரி என்று படுவனவற்றை நாங்கள் இங்கே எடுத்துக்கூற உரிமை பெற்றிருக்கிறோம். இதனை எவரும் பறித்துக்கொள்ள அனுமதிக்கமாட்டோம்.

"தமிழ் மொழி, தாய்நாட்டில் அவமதிக்கப்பட்டிருக்கிறது; தமிழ் அன்னைக்கு இங்கேதான் பரிசோதனை நடக்கிறது. வேறு நாடுகளில் எங்கும் அந்த நாட்டின் தாய்மொழி ஆட்சி மொழியாகத் தகுதி படைத்ததா என்ற கேள்வி எழும்புவதில்லை. ஆனல், இந்த நாட்டில்தான் அசற்குப் பரிசீலனைக் குழு அமைத்திருக்கிறார்கள். தமிழ் அன்னைக்கு ஏற்பட்டுள்ள இந்தக் களங்கம் சீக்கிரமே கழுவப்பட வேண்டும்"

என்று, தோழர் ப. உ. சண்முகம் எம்.எல்.ஏ. அவர்கள், சென்னை சட்டசபையில், கவர்னர் உரை மீது விவாதம் நடந்தபோது குறிப்பிட்டார்.

★

எஸ். எம். அண்ணமலை

தோழர் எஸ். எம். அண்ணமலை, எம்.எல்.ஏ. அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"வட ஆற்காடு மாவட்டத்தில் விவசாயிகள் பல போராட்டங்களின் மூலமாகத் தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்தி வந்திருந்தும் அந்தக் கோரிக்கைகளை இன்னும் சர்க்கார் ஏற்றதாகக் காணேம்.

"நியாயவாரம் விவசாயிகளுக்குக் கிடைக்குமாறு செய்வதில் சர்க்கார் கண்டிப்புடன் இருக்க வேண்டும்.

வட ஆற்காடு மாவட்டத்திற்கும், தஞ்சை பண்ணையாள் சட்டம் விஸ்தரிக்கப்பட வேண்டும் என்று கடந்த ஆண்டுகளில் விவசாயிகள் குரல் கொடுத்திருந்தும், சர்க்கார் இன்னும் அதைச் செய்யாதது வருந்தற்குரியதாகும்."

வீடுர் நீர்ப்பாசனத் திட்டத்திற்கு அனுமதி

ரூ. 61½ இலட்சம் செலவாகும்

புதுடில்லி, மே 10—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னை மாநிலத்தில் வீடுர் நீர்ப்பாசன திட்டத்தை நிறைவேற்ற இந்திய அரசாங்கம் அனுமதித்துள்ளதாம்.

இந்தத் திட்டத்திற்கு சுமார் ரூ. 61½ இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளதாம்.

குடும்பக் கட்டுப்பாடு நிலையம் நிறுவ உதவியாம்!

தமிழகத்திற்கு மத்திய சர்க்கார் அளிக்கும் தாராளம்

புதுடில்லி, மே 10—

டாக்டர்களுக்குக் குடும்பக் கட்டுப்பாடு பற்றி பயிற்சியளிப்பதற்கான நிலையமொன்றை நிறுவுவதற்கு சென்னை அரசாங்கத்திற்கு மத்திய சர்க்கார் ரூ. 14,000 அனுமதித்துள்ளனர். ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ். ரூ, 8,276 அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

விஷயத்தைத் திரித்துக் கூறி வியாக்கியானம் செய்த நிதிமந்திரி

அண்ணு குறுக்கிட்டுத் திருத்தினர்

கவர்னர் உரைமீது நமது அண்ணு அவர்கள் பேசுகையில், இந்த நாட்டின் தொழில் வளர்ச்சியில் டில்லி சர்க்கார் அக்கரை காட்டவில்லை என்பதையும், இந்த மாநிலத்திற்கும்—டில்லிக்கும் உள்ள உறவின் தன்மையையும் விளக்குவதற்காக, காங்கிரஸ்காரரான—எம்.எல்.ஏ., மந்திரி போன்ற பதவிகளை வகித்தவரான ஜே. எல். பி. ரோச் விக்டோரியா அவர்களின் வாசகம் ஒன்றைப் படித்துக் காட்டினர்கள்.

'இந்த மாநிலத்தில் என்ன செய்யவேண்டும்—என்ன செய்யக் கூடாது என்பதை, டில்லி சர்க்கார்தான் கட்டளையிடுகிறது; நாம், மத்திய சர்க்காரின் பாவாடை நாடாவில் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கிறோம்' என்ற ரோச் விக்டோரியா அவர்களின் வாசகத்தைப் படித்துக்காட்டி, 'இந்தப் 'பாவாடை நாடா'விலிருந்து நம்மை விடுவித்துக்கொள்ள வேண்டும்' என்பதுதான் நாங்கள் கூறுவது என்று அண்ணு அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

இதனை கனம் மந்திரி சுப்பிரமணியம் சரியாகப் புரிந்துகொள்ளாததாலோ, அல்லது தனது அவசர புத்தியினுலோ அல்லது வேண்டுமென்றே திரித்துக்கூறி மிகக் கோபமாகப் பேசினர்.

"வேண்டுமானல், ரோச் விக்டோரியா அவர்களது முயற்சி பற்றிய எல்லா தஸ்தாவேஜுகளையும் திரு. அண்ணுதுரையின் பார்வைக்கு வைக்கிறேன்; அவர்கள் படித்துப் பார்த்துவிட்டு, நியாய அநியாயங்களைச் சொல்லட்டும்"

என்று, அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டே சென்றர்.

அண்ணு அவர்கள் குறுக்கிட்டு எழுந்து,

"நான், ரோச் விக்டோரியா அவர்களைப் பார்த்ததுகூடக் கிடையாது; ரோச் விக்டோரியா அவர்களின் முயற்சிக்கு வெற்றி கிடைக்கிறதா இல்லையா என்பதைப் பற்றியும் எனக்கு அக்கரை இல்லை; ஆனல், அவர் ஒரு மந்திரியாக இருந்தவர். காங்கிரஸ்காரர் என்பதால் அவர், மாகாணத்திற்கும் — டில்லிக்கும் உள்ள உறவு பற்றித் தெரிவித்த கருத்தினையாவது இந்த சர்க்கார் கவனிக்கமாட்டார்களா என்ற கவலையினுல்தான், சபையில் அதனைத் தெரிவித்தேன்; வேறொன்றும் இல்லை,"

என்று, எடுத்து விளக்கினர்கள்.

தொடர்ந்து பேசிய நிதியமைச்சர், 'எதிர்க்கட்சியினர் சபையில் குற்றச்சாட்டுகளை எழுப்பும் போது விஷயங்கள் சரியானவை தானு என்று பார்த்துக்கொள்ள வேண்டும்' என்று குறிப்பிட்டாரேதவிர, டில்லிக்கும்—மாகாணத்திற்கும் உள்ள உறவு பற்றி அண்ணு எழுப்பிய குற்றச்சாட்டிற்கு மறுப்பு தரவில்லை!

வட நாட்டு நகரங்களில் நகர சுத்தித் தொழிலாளர் வேலை நிறுத்தம்

தெருக்கூட்டுமாறு போலீசாருக்குக் கட்டளை

ஜாம்ஷெட்பூர், மே 8—

நகரசுத்தித் தொழிலாளர்கள் கடந்த ஒருவார காலமாக இங்கு வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

இவர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட வேண்டுமெனக் கோரி, நிர்வாகத்தினரும், தொழிற் சங்கத்தவரும் வேண்டுகோள் விடுத்தும் பயனில்லை.

வேலை நிறுத்தத்தால், பாதிக்கப்பட்டுள்ள நகரத்தின் பிரதான பகுதிகளை, பிகார் 'ஹோம் கார்டு' கள் (போலீசார்) சுத்தம் செய்யுமாறு வற்புறுத்தப்பட்டிருக்கின்றனராம்.

மருத்துவ மனைகளிலும் இந்த போலீசார்தான் நர்சுகளுடன் சேர்ந்து, மருத்துவ மனையைச் சுத்தம் செய்தல், இறந்தவர்களை இடுகாட்டிற்கு எடுத்துச் செல்வுதல் போன்ற வேலைகளைச் செய்கின்றனர் என்று தெரியவருகிறது.

வார்தாவில்...

வார்தா நகரசபையைச் சேர்ந்த 50 நகரசுத்தித் தொழிலாளர்கள் கடந்த 7-ந் தேதியிலிருந்து கால வரையறையின்றி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இவர்கள் சம்பள உயர்வு, கிராக்கிப்படி உயர்வு போன்ற கோரிக்கைகளுக்காகவே இந்த வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதாக அறிவித்திருக்கிறது..

ஜாம் நகரில்...

ஜாம் நகரில் சுமார் 630 நகர சுத்தித் தொழிலாளர்கள் இதே கோரிக்கைகளுக்காக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

இதுவரையில் நடைபெற்றுள்ள அணு சோதனைகளின் விளைவால் 30 ஆண்டு காலத்தில் சுமார் 50,000 பேர் எலும்புப் புற்று நோய் கண்டு மடிவார்களாம்.

'பற்றுக்குறையைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்'

'நெய்வேலியிலிருந்து வெளியேற்றப்பட்டவர்க்கு தகுந்த நிவாரணம் தருக'

விவசாயிகள் பயனடைய தோழர் செல்வராஜ் தந்த உருப்படியான யோசனைகள்

"உணவுத் தானியங்கள் பற்றுக்குறையாயுள்ள பிரதேசங்களுக்கு உபரியாகத் தானியங்கள் உள்ள பகுதிகளிலிருந்து உணவுத் தானியங்களைக் கொண்டுவந்து சேர்த்து, பற்றுக்குறையைப் போக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும்"

என்று, சட்ட சபையில் பேசிய நமது எம்.எல்.ஏ. தோழர் எம். செல்வராஜ் குறிப்பிட்டார்.

மார்க்கெட் கமிட்டி ஏற்படுத்துக

தொடர்ந்து பேசிய அவர் கூறியதாவது:—

"ஒவ்வொரு மாவட்டத்திலும் சர்க்கார் 'மார்க்கெட் கமிட்டி' களை ஏற்படுத்த வேண்டும். நெல், கேழ்வரகு போன்ற உணவுத் தானியங்களைக் கொள்முதல் செய்வதும் விநியோகிப்பதும் இந்த 'மார்க்கெட் கமிட்டி'களின் அதிகாரத்தின்கீழ் கொண்டுவரப்படல்வேண்டும். இதனுல் விவசாயப் பெருமக்கள் பெரும் பயன் அடைவார்கள்.

ஆமை வேகம்

"நெய்வேலித் திட்டம் இன்னும் ஆமை வேகத்திலேயே போய்க்கொண்டிருக்கிறது. இது ஒருபுறமிருக்க, திட்டப் பிரதேசத்திலிருந்து வெளியேற்றப்பட்ட மக்களின் புனர் வாழ்வுக்குத் தேவையான ஏற்பாடு எதும் உருப்படியாகச் செய்யவில்லை; அவர்களுக்குப் போதுமான நிவாரணமும் அளிக்கவில்லை. சர்க்கார் இவைகளை உடனடியாகக் கவனித்து, நெய்வேலிப் பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களுக்கு, வேறு இடங்களில் தகுந்த குடியிருப்பு வசதியும், வேலை வாய்ப்பும் ஏற்பாடு செய்து தரவேண்டும்."

நெய்வேலித்திட்டத்திற்கு நிபுணர்கள் உதவி

புதுடில்லி, மே 10—

நெய்வேலித் திட்டத்திற்கு நிபுணர்களின் உதவியைப் பெற ஏற்பாடாகியுள்ளது; பிரிட்டிஷ் நிபுணர்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுள்ளனர்; இதற்கான ஒப்பந்தமும் ஏற்பட்டுள்ளது.

இதற்காக ரூ. 40 இலட்சம் மூன்று ஆண்டுகளுக்குச் செலவிடப்படுமாம்.

ஆண்டுக்கு 35 இலட்சம் டன் பழுப்பு நிலக்கரியை வெட்டி எடுப்பதற்கு சுமார் ரூ. 16,90,00,000 செலவிடப்படுமாம்.

தொழிலாளர் நலனுக்காக புதிய சட்டங்கள்!

புதுடில்லி, மே 10—

தொழிலாளர்களுக்கு நலன் தரும் பல புதியசட்டங்கள் டில்லி பாராளு மன்றத்தில் உருவாக்கப்பட இருக்கிறது.

பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு இதனுல் அதிக நன்மை கிடைக்கும் என்று தெரிகிறது.

இப்போதுள்ள சட்டங்களில் சில திருத்தங்கள் செய்யப்படும்; பல புதிய சட்டங்களும் வரும்.

நிலக்கரி சுரங்கத்தில் பணியாற்றும் தொழிலாளருக்கு அதிக பாதுகாப்பு அளிக்கவும், பிரசவ கால வசதி — சம்பளங்களும், மோட்டார் போக்குவரத்து தொழிலாளருக்கு வேலை நேர அளவு முதலியன பற்றியும் சட்டங்கள் இயற்றப்படுமாம்.

அணைகள் கட்டுவதற்கு இடமேயில்லையாம்!

அமைச்சர் மாணிக்கவேலர் கூறுகிறார்

வேலூர், மே 9—

சென்னை மாநிலத்தில் இனி எங்கும் அணைகள் கட்டுவதற்கு இடமில்லையாம்!

எல்லா நதிகளின் மீதும் தேவையான இடங்களில் அணைக்கட்டுகள் கட்டப்பட்டிருப்பதாக அமைச்சர் மாணிக்கவேலர் ஒரு பொதுக்கூட்டத்தில் தெரிவித்துள்ளார்

மேலும், பாலாற்றில் தண்ணீர் வருவதற்கு சென்னை, மைசூர் அரசாங்கத்தினர் முயற்சித்து வருகின்றனராம்.

காகிதம் தயாரிக்க புதிய ஆலைகள்!

புதுடில்லி, மே 10—

காகிதம், காகித அட்டை ஆகியவற்றின் உற்பத்தியை அதிகமாக்கும் தொழிற்சாலைகளை இந்திய அரசாங்கம் அனுமதித்துள்ளது. இத்துடன் மேலும் புதிய ஆலைகள் அமைக்கவும் டில்லி அனுமதியளித்துள்ளது.

ஆண்டிற்கு 2 இலட்சம் டன் காகிதம் தயாரிக்கும் ஆலைகள் 4½ இலட்சம் டன் காகிதம் தயாரிக்கச் செய்வதே இரண்டாவது திட்டத்தின் நோக்கமாம்.

பெயர்சூட்டு விழா

21—4—57 மாலை 7-மணிக்கு ஆமதாபாத்—பாப்புநகர் திடலில் தோழர் க. சண்முகம் வரவேற்க, தோழர் பி. இலக்குமணன் தலைமையில், தோழர் என். செல்வம் அவர்கள் மகவுக்கு தோழர் கே. ஆரிமுத்து அவர்கள் 'அழகிரி' என பெயர் சூட்டினர். பின்னர் தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்கினர்; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2. அன்பளிப்பாகத் தரப்பட்டது.

இராசேந்திர பிரசாத்

மீண்டும் குடியரசுத் தலைவரானார்

புதுடில்லி, மே 11—

இந்திய யூனியன் குடியரசுத் தலைவராக டாக்டர் இராசேந்திர பிரசாத் அவர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

டாக்டர் பிரசாத் அவர்கள் வரும் மே 13-ந் தேதியன்று பதவிப்பிரமாணம் எடுத்துக்கொள்வார் என்று தெரியவருகிறது.

மொத்தம் பதிவான 4,63,196 வாக்குகளில் டாக்டர் பிரசாத் 4,59,698 வாக்குகள் பெற்றார் என்று தெரிகிறது.

இந்த வாக்குப் பதிவில், எம். எல். ஏ.-க்களும், எம். பி.-க்களுமாக 2,449 பேர் கலந்துகொண்டனர் என்று தெரியவருகிறது.

மற்ற இரு அபேட்சகர்களான என். என். தாஸ் 2000; சௌத்ரி ஹரிராம் 1,498 வாக்குகள் பெற்று தோல்வி கண்டிருக்கின்றனர்.

தேர்தல் அதிகாரியாகப் பணியாற்றிய எஸ். என். முகர்ஜி இந்த முடிவுகளை நேற்று மாலை அறிவித்தார்.

இமயமலை உச்சியில் பனிப்பாறை சரிந்தது

மூவர் பலியாயினர்

காட்மாண்டு, மே 10—

நேப்பாளம்—திபேத் எல்லையிலுள்ள இமயமலைச் சிகரமான 'ஜுகல் இமல்' சிகரத்தின்மீது ஏறிச்செல்ல முயன்ற யார்க்ஷயர் மலையேறும் குழுத் தலைவர் காப்டன் சி. ஜே. டபிள்யூ. பாக்சும், இரு கூலியாட்களும், ஒரு பனிப்பாறை விழுந்து, மாண்டனர் என்று தெரியவருகிறது. இந்த விபத்து ஏப்ரல் 30-ந் தேதி நடைபெற்றதாம்.

அவர்கள் ஒருவரோடு ஒருவர் கயிற்றைக் கட்டிக்கொண்டு மலை ஏறிக் கொண்டிருந்த போது பாறை சரிந்து அவர்களை உருட்டித் தள்ளிவிட்டதாம்.

'லோட்டஸ்' வழக்கு அப்பீல்

புதுடில்லி, மே 8—

சென்னை உயர்நீதி மன்றம், 'லோட்டஸ்' குறுக்கெழுத்துப் போட்டி முதலாளி திரு. இராமசாமி (நாடார்)க்கு 2 ஆண்டுக் கடுங்காவல் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்ததை எதிர்த்து அப்பீல் செய்துகொள்ள, இன்று டில்லி தலைமை உயர்நீதிமன்றம் அனுமதியளித்தது.

அப்பீல் மனுவின்மீது முடிவு தெரியும்வரை, எதிரியை ஜாமீனில் விடுதலை செய்யவேண்டுமென்று கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை டில்லி தலைமை உயர்நீதிமன்றம் ஏற்கவில்லை.

உத்திரப் பிரதேசத்தில் சோஷலிஸ்டுகள் ஆர்ப்பாட்டம்

லட்சுமணபுரி, மே 10—

சர்க்கார் தொழிற்சாலை ஒன்றின் முகப்பில் தொங்கவிடப்பட்டிருந்த பெயர்ப்பலகையில் எழுதியிருந்த ஆங்கிலச் சொற்களைத் தார்கொண்டு அழிக்க முயற்சித்திருக்கின்றனர், சோஷலிஸ்டுகள்.

உ. பி. மாநிலம் முழுமையாக அவர்கள் துவங்கியுள்ள சத்தியாக்கிரக இயக்கத்தின் ஒரு பகுதியாக இந்த ஆங்கிலப் பெயர்களை அழிப்பதையும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

இந்த ஆர்ப்பாட்டக்காரர்களில், 24 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனராம்.

மொத்தம் உள்ள 52 மாவட்டங்களில், 19 மாவட்டங்களில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்றும், இதற்காகச் சுமார் 7,000 தொண்டர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றனர் என்றும் சோஷலிஸ்டுக் கட்சியினர் தெரிவித்திருக்கின்றனர்.

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்களுக்கு

முசிறி நகராட்சி மன்ற வரவேற்பு

இத்திங்கள் 13-ம் நாள் கழக நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதற்கு வருகைதரும் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கட்கு முசிறி நகராட்சி மன்றத்தார் வரவேற்பிதழ் வாசித்தளிப்பார்கள்.

இராயபுரம் போலீஸ் அதிகாரிக்கு எதிராக வழக்கு

சென்னை, மே 10—

சென்னை-இராயபுரம் சப்-இன்ஸ்பெக்டர், மற்றும் இரு போலீஸ் அதிகாரிகள் தன்னைக் காரணமின்றித் தாக்கியும், 'லாக்-அப்'பில் வைத்துத் துன்புறுத்தியதாகவும், சென்னை-இராயபுரம் பனைமரத்தொட்டியில் வசிக்கும் கே. சுந்தர்ராஜ் என்பவரால் இ. பி. கோ. 323, 34-வது பிரிவின்கீழ் நீதி வழங்கப்படவேண்டும் என்று கோரி, கடந்த 8—5—57-ல் இரண்டாவது மாகாண மாஜிஸ்திரேட் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேபோன்ற மற்றொரு வழக்கு எம். பலராமன் என்பவராலும் தொடர்ந்திருப்பதாகத் தெரியவருகிறது. (ச-தி.)

வடஆற்காடு காங்கிரசு குழுவிற்குச் சீட்டு!

சென்னை, மே 10—

வடஆற்காடு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி கலைக்கப்பட்டு, அதற்குப் பதிலாக மாவட்டக் காங்கிரஸ் வேலைகளைக் கவனிக்க 22-பேர் கொண்ட தற்காலிக செயற்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மேலும், சில தாலுகா, நகர காங்கிரஸ் குழுக்கள்கூட மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது.

மே தினப் பொதுக்கூட்டம்

12—5—57 மாலை 6½ மணிக்கு சேலம் நகர அச்சுத் தொழிலாளர் சங்கச் சார்பில், சேலம்—முதல் அக்கிரகாரம் (ஆற்றோரம்) சங்கக் கட்டடத்தின் முன்னிலையில், தோழர் பி. வி. கோவிந்தராசு தலைமையில், மே தின விழாப் பொதுக்கூட்டம் நடைபெறும்; அதுபோது, தோழர்கள் டி. ஆர். கிருஷ்ணன், கே. ஆர். கோபால், ம. கோபால், கே. எல். ரங்கசாமி, எம். எஸ். இராமையா ஆகியோர் பேசுவர்.

ஒத்திவைப்பு

சென்னை கோகலே மன்றத்தில் 11—5—57 சனி மாலை நடைபெறவிருந்த சேலம் தொகுதி தேர்தல் வழக்கு நிதிக் கூட்டம், அண்ணா அவர்கள் சென்னை கைத்தறி வார விழாவில் கலந்துகொள்வதால் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

மீண்டும் அச்சிறப்புக் கூட்டம் 2—6—57 ஞாயிறு காலை சென்னை கோகலே மன்றத்தில் நடைபெறும்; அண்ணா அவர்களும், மற்றவர்களும் கலந்து கொள்வர்.

—தி.மு.க. மாநில மாணவர் கிளை

சேலம் தேர்தல் வழக்கு நிதி

திருச்சியில் சிறப்புக் கூட்டம்

12—5—57 காலை 9-மணிக்கு திருச்சி தேவர் மன்றத்தில், சேலம் தேர்தல் வழக்கு நிதிக்காக சிறப்புக் கூட்டம் நடைபெறும்.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'வள்ளுவர் வகுத்த வாழும் நெறி' என்னும் பொருள் பற்றியும்:

தோழர் மு. கருணாநிதி அவர்கள் 'எதிர்க்கட்சி' என்னும் பொருள் பற்றியும்:

தோழர் கண்ணதாசன் அவர்கள் 'கவிதையும் காதலும்' என்னும் பொருள் பற்றியும் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்கள்.

இசைமுரசு நாகூர் இ. எம். அனிபா இசைவிருந்தளிப்பார்.

நன்கொடை: ரூ. 1, அணா 8.

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

மே 12: திருச்சி
13: முசிறிப்பகுதி
14: அன்பில்
17: மைலாப்பூர்

பர்மாவில் வாழும் வெளிநாட்டவருக்குத் தனி இலாகா ஏற்படுத்தப்படுமாம். அவர்களின் பிரச்சினையைப் பற்றி இந்த இலாகா கவனித்துவருமாம்.

அங்குள்ள இந்தியர்கள், பாகிஸ்தானியர்கள், சீனர்கள் ஆகியோர் முறையிட்டதற்கிணங்க இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்—அறிக்கை எண்: 4/57

சென்னை மாவட்டக் கழக உறுப்பினர்களுக்கு:

★

தி. மு. கழகப் பொதுக்குழுவால் முடிவெடுக்கப்பட்டு, கழகத்திலிருந்து விலக்கிவைக்கப்பட்டவர்களின் காரணமாகக் காலியாகியுள்ள இரண்டு பொதுக்குழு உறுப்பினர்கள் பொறுப்புகளுக்கும், தோழர் சி. பி. சி. அரசு அவர்களின் விலகுதலின் காரணமாகக் காலியாகியுள்ள பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கும், புதிய பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்குரிய நாளாக 12—5—57-ஆம் நாள் இதன்மூலம் உறுதிசெய்யப்படுகிறது.

தேர்தல் 12—5—57 அன்று காலை 10-மணிக்கு சென்னை 'அறிவகம்'த்தில் நடைபெறும்.

9—5—57
அறிவகம்
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. க.

குறிப்பு:—தலைமைக் கழகத்தின் 1—5—57-ஆம் நாளிட்ட 3/57 அறிக்கையில் குறிப்பிட்டிருந்தபடி 12-5-57-ல் நடைபெறுவதாயிருந்த சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் பொறுப்புக்கான தேர்தல் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, பொதுக்குழு உறுப்பினர்களுக்கான தேர்தல் மட்டுமே 12—5—57-ல் நடைபெறும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கழகக் கூட்டங்கள்

★

முசிறி:

பஸ் நிலையத்திற்கு அருகில்
13-5-57 இரவு 7-30 மணிக்கு
தலைவர்: சி. ஜே. நாதன்
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
மு. பெ. முத்துகருப்பன்

★

இளங்காடு:

அண்ணா திடலில்
13—5—57 மாலை 5 மணிக்கு
தலைவர்: வி. சுந்தரராசன்
பேசுபவர்: கி. மனோகரன்

★

மருவத்தூர்:

மாரியம்மன் கோயில் மைதானம்
13-5-57 மாலை 6-30 மணிக்கு
தலைவர்: வி. அருணாசலம்
பேசுவோர்:
மி. சு. இளமுருகுபொற்செல்வி
அரு. ஆதிமூலம்
தி. கிருட்டிணசாமி
இரா. இளமுருகு

★

வெள்ளக்கோவில் வட்ட கரட்டுப்பாளையம்:

14-5-57 மாலை 6-30 மணிக்கு
தி. மு. க. நகரத் துவக்கவிழா
தலைவர்: சாமிநாதன்
பேசுவோர்:
என். வி. நடராசன்
வி. கே. கலைமணி
கோவை செழியன்
முத்துரத்தினம்
அ. வீராசாமி
சி. கோவிந்தசாமி

★

வெள்ளக்கோவில் வட்ட அரியாண்டிவலசு:

13—5—57 மாலை 6-மணிக்கு
தலைவர்: நல்லசாமி
பேசுபவர்:
என். வி. நடராசன்

★

அன்பில்:

அன்பில் மந்தையில்
14—5—57 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
மு. கருணாநிதி
ஏ. பி. தர்மலிங்கம்
ஏ. ஆர். கோபால்

(அன்று மாலை பொதுச்செயலாளர் அவர்கள், செங்கரையூர்—அரியூர் கிராமங்களில் கழகக் கொடிகள் ஏற்றுவித்து, கழகக் கிளைகள் துவக்கி வைப்பார்.)

★

நரசிங்கபுரம்:

(செங்கற்பட்டு மாவட்டம்)
கூவம் அடுத்த நரசிங்கபுரத்தில்
14—5—57 மாலை 6-மணிக்கு
தலைவர்: எஸ். ஏகாம்பரம்
பேசுவோர்:
அ. ஸ். ஸ்.
முகவை ஆர். எஸ். பாண்டியன்

(அண்ணா அவர்களுக்கு பாராட்டிதழ் வாசித்தளிக்கப்படும்.

★

திண்டுக்கல்:

கோவிந்தாபுரம் ரேடியோ திடல்
12—5—57 மாலை 7 மணிக்கு
தலைவர்: பால்ராசன்
பேசுவோர்:
எஸ். கந்தசாமி, முகதா,
என். முத்து, ஏ. சுப்பையா

இராமமூர்த்தி—கமலா திருமணம்

10—5—57 மாலை 8 மணிக்கு, சென்னைப் பதிவாளர் முன்னிலையில், இராமநாதபுரம் மாவட்டத் தோழர் இராமமூர்த்தி—தோழியர் கமலா வாழ்க்கை ஒப்பந்தம் சிறப்புற நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டி, தோழர் உக்கிரபாண்டியன், மற்றும் பலர் பேசினர்; இதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி — பொறுப்பாளர்.

பாராட்டுக் கூட்டம்

★

13-5-57 மாலை 6-30 மணிக்கு, வேலூர் - கஸ்பாவில், தோழர் எம். பி. சாரதி அவர்களைப் பாராட்டி ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும்; அதுபோது, தோழியர் சத்தியவாணிமுத்து, தோழர்கள் கே. ஏ. மதியழகன், அ. கருந்தேவியன் ஆகியோர் பாராட்டுரை வழங்குவர்: தோழர் எம். பி. சாரதி நன்றியுரை ஆற்றுவார்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

12—5—57 காலை 10 மணிக்கு, சென்னை-இராயபுரம், மார்க்கெட் சந்து-மக்கள் முன்னேற்ற மன்றப் பணிமனையில், தோழர் எ. தேவராசன் தலைமையில், 'நாட்டுப் பிரிவினை வேண்டும்' என்ற தலைப்பில், தோழர்கள் விவேகானந்தம், ப. புகழேந்தி, அரசு, கே. இராதாகிருஷ்ணன் ஆகியோர் பேசுவர்.

* * *

12—5—57 காலை 9 மணிக்கு, சென்னை 42-வது வட்ட தி. மு. கழகப் பணி மனையில் (எண். 4, நமசிவாய முதலித் தெரு, சென்னை - 5.) தோழர் மு. வரதராசன் தலைமையில் 'இன்றைய அரசியல் நிலை' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

12—5—57 இரவு 8 மணிக்கு, கோவை மாவட்டம் - புதுப்பாளையம் தி. மு. கழகச் சார்பில், தம்பி சொற்பயிற்சி மன்றத்தில் 'குடியரசும் - முடியரசும்' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

12—5—57 காலை 9 மணிக்கு, சென்னை - வண்ணையம்பதி, இளங்கோ கலை மன்றப் பணிமனையில், தோழர் சி. ந. முனுசாமி தலைமையில் 'நாடும்-ஏடும்' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

13—5—57 மாலை 6 மணிக்கு, சென்னை - 5-வது வட்டம், 22, மிண்ட் சுப்பராயலு நாயுடு தெரு - இளங்கோ படிப்பக மனையில், தோழர் எம். ஜி. ஜி. லா தலைமையில் 'அரசியல்' எனும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

சென்னை கல்விச் சங்கம்

12—5—57 மாலை 5 மணிக்கு, சென்னை கல்விச் சங்க ஆதரவில், பட்டாளம் - ஸ்ட்ரான்ஸ் ரோடு ஆண் பள்ளியில், திரு. த. வே. முருகேசனார் தலைமையில், திரு. க. வீ. வரதன் 'இறை மாட்சி' எனும் பொருள்பற்றிப் பேசுவார்.

திருமணம்

13—5—57 காலை 9 மணிக்கு, கடலூர் என். டி. - பழைய வண்டிப்பாளையம் தோழர் து. கலியப்பெருமாள் — தோழியர் வி. சிவகாமசுந்தரி வாழ்க்கை ஒப்பந்த விழா, தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் தலைமையில், பழைய வண்டிப்பாளையம்-எண். 31 மணமகள் இல்லத்தில் நடைபெறும்; பேராசிரியர் க. அன்பழகன், தோழர் பூ. கணேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

மறைவு

10—5—57 காலை 9-மணியளவில், சென்னை—திருவொற்றியூர் தோழர் டி. பி. செகந்நாதன் அவர்களின் அன்னையார் சுந்தரம்மையார் இயற்கை எய்திய செய்திகேட்டு வருந்துகிறோம். அன்னையின் பிரிவால் வருந்தும் தோழருக்கு நமது அனுதாபம் உரியதாகுக. (ஆ-ர்)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அருமை அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.